தென்னாட்டின் வீரம் செறிந்த வரலாற்றுப் பக்கங்களில்

# புரட்சிச் சுடர் வீரபாண்டிய கட்டபொம்மன் புகழ் எந்நாளும் ஒளி வீசும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 17–

தென்னாட்டின் வீரம் செறிந்த வரலாற்றில் புரட்சிச் சுடர் வீரபாண்டிய கட்டபொம்மன் புகழ் எந்நாளும் ஒளி வீசும் என்று அவரது நினைவு தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



**ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகத் தமிழ்நாட்டில் தோன்றிய புரட்சிச் சுடர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் நினைவு நாள்!**

**அந்நியரின் ஆதிக்கம் பொறுக்காமல், நெஞ்சை நிமிர்த்திப் போரிட்ட அவரது புகழ், தென்னாட்டின் வீரம் செறிந்த வரலாற்றுப் பக்கங்களில் எந்நாளும் ஒளிவீசும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.

அண்ணா அறிவாலயத்தில் War Room!

# பொதுமக்களுக்கு உதவிட நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தினேன்!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளப் பதிவு!

சென்னை, அக். 17 –

மழையினால் பாதிக்கப்படும் மக்களுக்குத் தேவையான உதவிகள் கிடைத்திட அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள *War Room* மூலம் ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு உதவிடுமாறு கழக நிர்வாகிகளை நேரில் சென்று அறிவுறுத்தினேன் என தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.10.2024), வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**“திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள ‘War Room’ஐப் பார்வையிட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பகுதி வட்டச் செயலாளர்கள், கவுன்சிலர்கள் ஆகியோரைத் தொடர்பு கொண்டு, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை முகாம்களுக்கு அழைத்துச் செல்வதோடு, அவர்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளைச் செய்துகொடுத்து, நிவாரணப் பணிகளில் அரசு இயந்திரத்துக்குத் துணை நிற்குமாறு கேட்டுக் கொண்டேன்.**

**இரவு முழுதும் விழிப்புடன் பணியாற்றி, கோரிக்கைகளை ஒருங்கிணைத்து, பொதுமக்களுக்கு உதவிடுமாறு கழக நிர்வாகிகளை அறிவுறுத்தியுள்ளேன்.**

**அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள War Room எண்: 08069446900**

@arivalayam @DMKITwing @TRBRajaa

#NorthEastMonsoon #ChennaiRains #TNRains”

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

ஆலந்தூர் மண்டலத்தில் –

# ரூ.311.61 கோடியில் வெள்ளத் தடுப்புப் பணிகள்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

*சென்னை, அ. 17 -*

*குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலந்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட மாதவபுரம், வ.உ.சி நகர், ஜீவன் நகர், வீராங்கல் ஓடை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*ஆய்வின் போது அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்ததாவது,*

*ஆலந்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட அய்யப்பன்தாங்கல், பரணிபுத்தூர், மௌலிவாக்கம், கொளப்பாக்கம், முகலிவாக்கம், மணப்பாக்கம் ஆகிய பகுதிகள் போரூர் ஏரியின் உபரிநீர் வெளியேற்றத்தால் பாதிக்கப்படுவதை தடுக்க ரூ.204.93 கோடி மதிப்பில் மழைநீர் வடிக்கால் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. வாய்க்கால்களின் மதகுகள் சீராக இயங்குமாறு தயார் நிலையில் வைத்திருக்க அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஆதம்பாக்கம், பழவந்தாங்கல், வானுவம்பேட்டை, நங்கநல்லூர் வீராங்கல் ஓடையால் ஏற்படும் பாதிப்புக்களை சரி செய்ய ரூ.13.80 கோடி மதிப்பில் அதன் கரைகளை பலப்படுத்துப்படும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. ஓடையின் நீர் வரத்து தடைப்பட்டால் உடனுக்குடன் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆலந்தூர் மண்டலத்தில் ரூ. 83 கோடி மதிப்பில் அமைக்கப்படுள்ள மழைநீர் வடிகால் பணிகளையும், ரூ.9.88 கோடி மதிப்பீட்டில் கண்ணன் காலனி, ஆலந்தூர் மாதவரம் ஆகிய இடங்களில் கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.*

*மேலும், ஆலந்தூர் மண்டலத்தில் பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 13 அவசர கால குழுக்களும், சுமார் 2 ஆயிரம் பொதுமக்கள் தங்கும் வகையில் 13 நிவாரண முகாம்கள், 3 பொது சமையல் கூடங்கள், 52 மோட்டார் பம்புகள், 37 மரம் வெட்டும் இயந்திரங்கள், 5 மண் நிரம்பும் இயந்திரங்கள், 12 டிப்பர் லாரிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.*

*இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.*

*உடன், ஆலந்தூர் மண்டலத்தின் கண்காணிப்பு அலுவலர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.பிரபாகர், மண்டல குழு தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் மண்டல அலுவலர் சீனிவாசன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.*

# சேலம் கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

*சேலம், அக். 17 -*

*சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு அவசரக் கூட்டம் அக். 20 அன்று நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*



*சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் 20-10-2024 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையிலும், தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் 081-கெங்கவல்லி க.ஆனந்த், (விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 082 - ஆத்தூர்) எம்.எஸ். கணேஷ்குமார், (கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 083 - ஏற்காடு) சி.ஆனந்தகுமார், (மாநில இளைஞர் அணி துணை செயலாளர், 091 - வீரபாண்டிஸ்ர). டி.கே. கிருபாகரன், (ஈரோடு வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்) ஆகியோரது முன்னிலையிலும் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பி னர்கள், தலைமை கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தேர்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் மாநில துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வாக்குசாவடி முகவர்கள் BLA-2 மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.*

*இக்கூட்டத்தில் கழக உறுப்பினர் அட்டை வழங்குதல், 2. வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல் 3. கழக ஆக்கப் பணிகள். ஆகியவை குறித்து ஆலோசிக்கப்படுகிறது.*

*இவ்வாறு எஸ்.ஆர்.சிவலிங்கம் கூறியுள்ளார்.*



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், 15.10.2024 அன்று சென்னை, தரமணியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின்கீழ் இயங்கிவரும் தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகத்தில், அச்சுப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் வே.ராஜாராமன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



வடசென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள எழில் நகர், தமிழன் நகர், ஜே.ஜே நகர், ஆகிய இடங்களில் தேங்கியுள்ள மழைநீரை மின் மோட்டார் மூலம் அகற்றும் பணியை கலாநிதி வீராசாமி எம்.பி. பார்வையிட்டு, அப்பணிகள் விரைந்து முடிக்க மாநகராட்சி பணியாளர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் ஜே.ஜே. நகர் பகுதியில் உள்ள உணவு கூடத்தில், நிவாரண முகாம்களுக்கு அனுப்பப்படும் உணவின் தரத்தை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள், மாநகராட்சி பணியாளர்கள் உடனிருந்தனர்.

ஆளுநரின் பதவிக் காலம் தொடர்பாக

# ஒன்றிய அரசு விரைவில் - நடவடிக்கை எடுக்கும் !

## புதுக்கோட்டையில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

*புதுக்கோட்டை, அக்.17-*

*புதுக்கோட்டை மாநகராட்சி பகுதியில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வந்த நிலையில் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதை முன்னிட்டு எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சியர் அருணா, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், மாநகர செயலாளர் ஆ. செந்தில்,தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப சரவணன், ஆணையர் நாராயணன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.*

*குறிப்பாக புதுக்கோட்டை பால்பண்ணை அருகே உள்ள வரத்து கால்வாயை பார்வையிட்டு ஆய்வு செய்தவர்கள் பெரியார் நகர் பகுதிகளிலும்*



*ஆய்வு மேற்கொண்டு அதிக மழை பெய்தால் தண்ணீர் தேங்காமல் செல்லக்கூடிய அளவிற்கு தோரணை வாய்க்கால்கள் மரத்து கால்வாய்கள் முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பதையும் பார்வையிட்டனர்.*

*அப்போது செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசுகையில்:*

*வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீர்நிலை ஆக்கிரமிப்புகளை முறையாக அகற்றி வருகிறோம் , இதில் ஆளுங்கட்சியின் தலையீடு எதுவும் இல்லை. அவ்வாறு இருந்தால் எங்களிடம் தகவல் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.*

*ஆளுநரிடம் மோதல் போக்கு வேண்டாம் என முதல்வர் அறிவுறுத்தி உள்ளதாக தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் கூறியுள்ளது குறித்து பதில் அளித்த அமைச்சர் எஸ். ரகுபதி,*

*முதல்வர் உயர் கல்வித் துறை அமைச்சரிடம் வேண்டுமானால் அவ்வாறு சொல்லி இருக்கலாம் அதைப்பற்றி எனக்கு தெரியாது என்று கூறினார்.*

*கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மீண்டும் கள்ள சாராயம் காய்ச்சப்படுவது குறித்த கேள்விக்கு பதில் அளித்த தமிழ்நாடு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்*

*திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்கும். அதனை சட்டம் போட்டு தடுக்குற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்கும் , திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்று கூறிய அமைச்சர் என்.ரகுபதி , அவ்வாறு இருந்தாலும் கள்ளச்சாராயம் காய்ச்சும் நபர்களை தமிழ்நாடு அரசு இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கி வருகிறது என்றும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் தெரிவித்தார்.*

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# பள்ளி மாணவர்களிடையே கலைஞரின் கவிதைகள், திரைப்பட, நாடக வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி!

## மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன் துவக்கி வைக்கிறார்!

*கிருஷ்ணகிரி, அக். 17-*

*கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இன்று (17.10.2024 வியாழக்கிழமை) காலை 10.30 மணிக்கு, அரசு திருமண மண்டபம் . என்.மோட்டூர், மத்தூரில் நடைபெறவுள்ளது.*

*மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் அமைப்பாளர் எஸ்.எஸ் சங்கர் தலைமை தாங்குகிறார்.*

*மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் தணிகை ஜி.கருணாநிதி வரவேற்புரையாற்ற, மாவட்ட பொருளாளர் ப.கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.செந்தில், மத்தூர் வடக்கு ,தெற்கு. ஒன்றிய கழக செயலாளர்கள் குண. வசந்தரசு,கே.ஆர்.கே.நரசிம்மன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.ஆர். கோதண்டன், மாவட்ட துணை தலைவர் ஏ.ராஜசேகர், இந்த அணியின் துணை அமைப்பாளர்கள் எஸ் மோதிலால், எம் ஆனந்தன்,ஆர்.எஸ்.கிரிதர், எஸ். கார்த்திகேயன், ஆர். மோகன், கே.பார்த்திபன், ஆர் சுந்தரராசன், என்.சி.சிவகுமார், செ. அரி, எஸ்.அரவிந்தன், கே. ஒ.தேவராஜ், கே.ஜவகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.கழக செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. போட்டியை துவக்கி வைத்து பரிசுகள் வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.*

*இவருடன் மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான கே.வி.குப்பம் சி. கோபி கலந்துக் கொள்கிறார்.*

*சிறப்பு அழைப்பாளர்களாக மாநில அமைப்புச் சாரா ஓட்டுனர் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தி. செங்குட்டுவன், தலைமை கழக சொத்து பாதுகாப்பு செயலாளர், முன்னாள் எம்பி.இ.ஜி.சுகவனம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாநில மகளிரணி ஆலோசனை குழு உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் முன்னாள் எம்பி. எம்.வி. வெற்றிச் செல்வன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன், மாநில மகளிரணி பிரச்சார குழு செயலாளர் டாக்டர்.எஸ்.மாலதி நாராயணசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி. கோவிந்தசாமி, வி. கிருஷ்ணமூர்த்தி, மற்றும் பி.டி.அன்பரசன், கே.வி.எஸ்.சீனிவாசன், ஆகியோரும், மாவட்ட அவைத்தலைவர் எ.நாகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள், பி.கே. கோவிந்தசாமி, எம்.சந்திரன், சாவித்திரி*

*கடலரசுமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜெ.கே.கிருபாகரன், பி. பரிதா நவாப், பொதுகுழு உறுப்பினர்கள் டி. பாலன், ஏ.சி.நாகராசன், என் அஸ்லாம், சித்திரா சந்திரசேகர், நகர செயலாளர் எஸ்.கே. நவாப்,ஒன்றிய கழக செயலாளர்கள்.வி. சாந்தமூர்த்தி, க. மகேந்திரன், சி. சுப்பிரமணி, வி.ஜி.ராஜேந்திரன், டி.செல்வம், எஸ். குமரேசன், எஸ்.ரஜினி செல்வம், பி.கோவிந்தன், டி. தனசேகரன், எம். அறிஞர், பேரூர் கழக செயலாளர்கள் வி.சி. தம்பிதுரை, ஜே.கே. எஸ்.பாபு, பி.சி வெங்கட்டப்பன், பி.பார்த்திபன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி பிரதி நிதிகள் கழக மூத்த முன்னோடிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் என, அனைவரும் கலந்துக் கொள்கிறார்கள்.*

*முடிவில் மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை செயலாளர் எஸ்.கே ரங்கன் நன்றி கூறுகிறார்.*

*இந்த நிகழ்வை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி ஏற்பாடு செய்துள்ளது.*





வடகிழக்கு பருவ மழை காரணமாக மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு144, மதுரவாயல் ஓம் சக்தி நகரில் உள்ள கூவம் ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டு மண் அரித்து செல்லப்படுவதால் ஆற்றின் சீரமைப்பு பணிகள் குறித்து நேற்று (16.10.2024) மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, வட்டார துணை ஆணையர் (தெற்கு) எம். பி.அமீத், ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இந்நிகழ்வில் மண்டலம்11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் எம்.இ.ஸ்டாலின், வட்ட கழக செயலாளர் சி.சசிகுமார் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.